### களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நாகர்கோவில் – சங்கரன்கோவிலில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை நேற்று (ஏப்ரல் 3ஆம் தேதி ) திருநெல்வேலியில் தொடங்கினார்.**

**இன்று காலை நாகர்கோவிலிலும், மாலையில் சங்கரன் கோவிலிலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்று கிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | நாகர்கோவில் (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | சங்கரன்கோயில் (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### சிறுநீர் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் ரூ.25 லட்சம் செலவில்

## சிறுமிக்கு சிகிச்சையளித்துள்ள ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை குழுவினருக்குப் பாராட்டு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஏப்.4-

**சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக 25 லட்சம் ரூபாய் சிகிச்சை அளித்துள்ள நம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவினரைப் பாராட்டு கிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட சிறுமிக்குத் தென்னிந்தி யாவிலேயே முதல்முறையாக 25 லட்ச ரூபாய் சிகிச்சையை அளித்துள்ள நம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவினரைப் பாராட்டுகிறேன்!

இத்தகைய சாதனைகள் தொடர, கடைக்கோடி மக்களுக்கும் உயர்தர சிகிச்சையை உறுதிசெய்ய, அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில்,

- **மருத்துவக் காப்பீட்டுத் தொகை 10 லட்சம் ரூபாயாக உயர்வு**
- **சென்னை, காஞ்சிபுரம் போன்று, பிற வட்டாரங்களிலும் அரசு மருத்துவமனைகளில் புற்று நோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள்**
- **தஞ்சாவூர், தருமபுரி, விழுப்புரத்தில் உயர்சிறப்பு மருத்துவமனைகள்**
- **மண்டல அளவில் கருத்தரிப்பு மையங்கள்**
- **மாவட்ட & வட்ட அளவிலான மருத்துவமனைகளில் டயாலிசிஸ் கருவிகளின் எண்ணிக்கை**




- **இருமடங்காக்கப்படும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை** #StalinStatement **என வழங்கியிருக்கிறேன்!**

**நலமான தமிழ்நாடு 2030–க்கு வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது, சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### தென்காசி தெற்கு மாவட்டத்தில்

## ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் – அன்பகம் கலை உரையாற்றினார்!

தென்காசி.ஏப்.4-

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கு உள்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை பங்கேற்று உரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் தேர்தல் பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வில் தென்காசி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மதியழகன், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் குணசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் அழகுசுந்தரம், ரமேஷ், சீனித்துரை, ஜெயா, நகர செயலாளர்கள் சாதிர், கணேசன், பேரூர் செயலாளர்கள் மேலகரம் சுடலை, குற்றாலம் குட்டி, முத்தையா, சுந்தரபாண்டிய புரம் பண்டாரம், கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கீழ்க்கண்டவாறு தேர்தல் பொறுப்பாளர்கள் அறிவிக்கப் பட்டுள்ளனர்.

அதன்படி ஆலங்குளம் வடக்கு ஒன்றிய தேர்தல் பொறுப்பாளராக மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் இஞ்சி இஸ்மாயில், ஆலங்குளம் மத்திய ஒன்றியம் பொறுப்பாளர்களாக மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு தலைவர் சங்கரநயினார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஜேம்ஸ், கீழப்பாவூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளராக மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அன்பரசன், கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளராக பொது குழு உறுப்பினர் அருள்,

கீழப்பாவூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளராக மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், தென்காசி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளராக மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் பி.எஸ். அண்ணாமலை, தென்காசி நகர பொறுப்பாளராக பொதுக்குழு உறுப்பினர் இராஜேஷ்வரன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுரேஷ், சுரண்டை வடக்கு நகர பொறுப்பாளராக மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ரகுமான் சாதத், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மஹ்மூதா, சுரண்டை தெற்கு நகர பொறுப்பாளராக மருத்துவ அணி தலைவர் டாக்டர் மாரிமுத்து, கடையநல்லூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளராக மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அழகு தமிழ் சங்கர், சுந்தரபாண்டிபுரம் பேரூர் பொறுப்பாளராக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சுப்பிரமணி யன், மேலகரம் பேரூர் பொறுப்பாளராக மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கோமதிநாயகம், குற்றாலம் பேரூர் பொறுப்பாளராக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ண ராஜா, இலஞ்சி பேரூர் பொறுப்பாளராக மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சண்முக மணிகண்டன் ஆகியோர்கள் களப்பணி ஆற்றுகின்றனர்.